**செய்தி வெளியீடு எண் : 1268** **நாள் : 27.07.2022**

**சென்னையில் நடைபெறும் 44வது சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டி 2022 முன்னிட்டு சிறப்பு நிகழ்வாக தமிழ்நாடு முழுவதும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கிடையே நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ–மாணவியர்கள் சென்னையிலிருந்து சிறப்பு விமானம் மூலம் பெங்களூர் வரை அழைத்துச் சென்று வரும் நிகழ்வினை மாண்புமிகு சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.**

*******

சென்னையில் நடைபெறும் 44வது சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டி 2022 முன்னிட்டு சிறப்பு நிகழ்வாக தமிழ்நாடு முழுவதும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கிடையே நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ–மாணவியர்கள் சென்னையிலிருந்து சிறப்பு விமானம் மூலம் பெங்களூர் வரை அழைத்துச் சென்று வரும் நிகழ்வினை மாண்புமிகு குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி , மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலையில் சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று(27.07.2022) சென்னை விமான நிலையத்தில் துவக்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறை 2022–23ம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சென்னையில் நடைபெறும் சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளைத் தொடர்ந்து அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கிடையே சதுரங்கம் குறித்த ஆர்வத்தை ஏற்படுத்தும் வண்ணம், பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சதுரங்கப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெறும் மாணவர்கள் சர்வதேச சதுரங்க வீரர்களுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்படும். இத்திட்டம் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்" என்று அறிவித்தார்.

இதனடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளின் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்றுநரைக் கொண்டு மாவட்ட அளவில் சதுரங்க விளையாட்டில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்கள் மூலமாக மாணவர்களுக்கு சதுரங்க விளையாட்டின் நுட்பங்கள் பயிற்றுவிக்கப்பட்டன.

தமிழ்நாடு முழுவதும், பள்ளி அளவில் சதுரங்கப் போட்டிகள் நடைபெற்று, அதில் வெற்றி பெறுவோர். வட்டார அளவிலான போட்டிகளில் பங்கேற்று, பின் அதன் வெற்றியாளர்கள் மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்றனர். மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் மாநில அளவிலான சதுரங்கப் போட்டியில் பங்கேற்று விளையாடினார்கள். அதிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளைக் காணவும் சர்வதேச சதுரங்க வீரர்களுடன் கலந்துரையாடவும் தமிழ்நாடு அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் 1 – 5 வகுப்புகள், 6 – 8 வகுப்புகள், 9 –10 வகுப்புகள், 11 – 12 வகுப்புகள் என நான்கு பிரிவுகளாக நடைபெற்றன. வெற்றிபெற்ற அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக 73 மாணவிகள், 76 மாணவர்கள் என மொத்தம் 149 மாணவ–மாணவியர்கள், 3 ஆசிரியர்கள் சிறப்பு விமானம் மூலம் சென்னையிலிருந்து பெங்களூர் வரை விமானத்தில் பறந்து கொண்டே சதுரங்கம் விளையாடவுள்ள சிறப்பு நிகழ்வை துவக்கி வைத்த மாண்புமிகு சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாணவ மாணவியர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து அனிவருக்கும் செஸ் ஒலிம்பியாட் இலட்சினையான தம்பி சிலையை பரிசாக வழங்கி, பாராட்டி வழியனுப்பி வைத்தார்.

விமானத்தில் பறக்கும் போதே மாணவ மாணவிகளுக்கு சதுரங்க போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெறும் வெற்றிபெறும் மாணாக்கர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் விருது வழங்கி சிறப்பு செய்ய உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.கருணாநிதி, பள்ளிக்கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா , இ.ஆ.ப . , செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீபஜெயசீலன் இ.ஆ.ப., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in